**தலைப்பு 310 – அரசாங்கத் தொழிற்சாலை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 310 – அரசாங்கத் தொழிற்சாலையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு வணிக முற்பணக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 17 ஆம் திகதி அரசாங்கத் தொழிற்சாலையின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

அரசாங்கத் தொழிற்சாலைக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 231.58 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 162.32 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அரசாங்க தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 69.25 மில்லியன் அதாவது 29.90 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 79.38 | 75.57 | 3.81 | 4.80 |
| மூலதனம் | 152.20 | 86.76 | 65.44 | 43.00 |
| மொத்தம் | 231.58 | 162.33 | 69.25 | 29.90 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அரசாங்கத் தொழிற்சாலைக்குரிய 31001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 28.63 | 20.82 | 20.63 | 25.10 | 128.00 | 81.40 |

### 2.2.2 களஞ்சிய முற்பணக் கணக்கு

அரசாங்கத் தொழிற்சாலையினால் பேணப்பட்டிருந்த 31002 ஆம் விடய இலக்க களஞ்சிய முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | | செலவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 120.00 | 116.87 | 120.00 | 124.88 | 80.00 | 59.49 | 20.00 | - |

**2.2.3 வணிக முற்பணக் கணக்கு**

**(அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அரசாங்கத் தொழிற்சாலையினால் பேணப்பட்டிருந்த 31003 ஆம் விடய இலக்க ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | | செலவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 308.00 | 304.90 | 280.00 | 341.13 | 180.00 | 123.30 | 5.00 | 2.26 |

**(ஆ) நிதி விளைவுகள்**

அரசாங்கத் தொழிற்சாலையினால் பேணப்பட்ட 31003 ஆம் விடய இலக்க ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கின் நிதி விளைவுகள் பின்வருமாறு இருந்தது.

**நிதி விளைவுகள்**

| 2015 | | 2014 | |
|---|---|---|---|
| கருதுகோள் கட்டணம் நீங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் அடங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் நீங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் அடங்கலாக இலாபம் |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 4.29 | 4.09 | 8.07 | 7.87 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

அரசாங்கத் தொழிற்சாலையின் கீழுள்ள 7002/0000/00/0043/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 18.62 மில்லியனாக இருந்தது.

**2.4 பொது வைப்புக் கணக்குகள்**

அரசாங்கத் தொழிற்சாலையின் கீழ் வரும் 05 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26.09 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/000/0008/0046/000 | 24.03 |
| 6000/0000/000/0001/0064/000 | 1.33 |
| 6000/0000/000/0002/0082/000 | 0.49 |
| 6000/0000/000/0013/0054/000 | 0.05 |
| 6000/0000/000/0016/0034/000 | 0.19 |
| மொத்தம் | 26.09 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

அரசாங்கத் தொழிற்சாலையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 03 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 38 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ii) தொழிற்சாலையினால் சரியான சாத்தியவள ஆய்வின்றி குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கீட்டின் மூலம் நிதி ஏற்பாடு பெறப்பட்டமையினால் 02 செலவின விடயங்களுக்காக பெறப்பட்ட மேலதிக நிதி ஏற்பாடுகளிலிருந்து 100 சதவீதம் மற்றும் 98.40 சதவீதம் ஆன நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

(iii) நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக தொழிற்சாலையினால் 04 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 3,418,713 இனால் விஞ்சி ரூபா 15,418,713 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

31001 ஆம் விடய இலக்க அசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடுகள் நிலுவையாக இருந்த ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,851,233 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 14 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்படுகின்ற போதிலும், அந்த மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்கில் காண்பிக்கப்படுகின்ற சீராக்கப்படாத ரூபா 15,800 பெறுமதி தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பொது வைப்புக் கணக்குகள்

02 வருடங்களை விஞ்சிய ரூபா 241,696 கூட்டுத்தொகையான 11 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 வருடாந்த பெறுகைத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பெறுகைத் திட்டம் கணக்காண்டு ஆரம்பித்து 02 மாதத்தின் பின்னர் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 3.4.2 உள்ளகக் கணக்காய்வு

தொழிற்சாலையால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 இணங்காமைகள்

தொழிற்சாலையின் வங்கிக் கணக்கொன்றிலிருந்து 06 மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த ரூபா 9,989 கூட்டுப்பெறுமதியான நான்கு காசேலைகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் தொழிற்சாலையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த வங்கிக் கணக்கிற்குரிய தொழிற்சாலையின் ஏடுகளின் பிரகாரம் ரூபா 115,749 காசு மீதியில் வேறுபாடொன்று 2014 திசெம்பர் மாதத்திலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அதனை சீர் செய்வதற்கும் தொழிற்சாலை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.6 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளய்வாண்டின் இறுதியளவில் ரூபா 610 மில்லியன் கூட்டுத்தொகையான 16 செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. அதில் 03 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஏனைய 13 செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் 2 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.7 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 17 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 05 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 156 | 128 | 28 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 434 | 339 | 95 | - |
| (v) | ஏனையவை (ஒப்பந்த) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 618 | 490 | 129 | 01 |